# தமிழ் நாடு அரசு

## சுருக்கம்

படித்து வேலை வேண்டி தமிழ்நாட்டில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து காத்திருப்போருக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம்- அமல்படுத்தல் -ஆணை வெளியிடப்படுகிறது.

---

## தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஆர்.2) துறை

அரசாணை (நிலை) எண்.72 — நாள்: 25.08.2006

படிக்க:

1. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையரின் கடிதம் எண். தி.வே/ 23094/2006, நாள்: 16.6.2006.
2. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் கடிதம் எண்: தி.வே/ 23094/2006. நாள்: 21.08.2006.

***

**ஆணை:**

படித்து விட்டு வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தும் எவ்வித வேலைவாய்ப்பும் கிடைக்காமல் பல்லாண்டு காலமாகக் காத்திருக்கும் இளைஞர்களின் துயரினைத் துடைக்கும் வகையில் இவ்வரசின் கொள்கை முடிவிற்கிணங்க பத்தாம் வகுப்பு முடித்தவர்களுக்கு மாதம் 150/- ரூபாயும், மேல்நிலைப் பள்ளிப்படிப்பை நிறைவு செய்தவர்களுக்கு மாதம் 200/- ரூபாயும், பட்டதாரிகளுக்கு மாதம் 300/- ரூபாயும் உதவித் தொகை வழங்குவது குறித்த கருத்துரு மேலே படிக்கப்பட்ட கடிதங்களில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையரிடமிருந்து பெற்று, அக்கருத்துருவை அரசு கவனமாக பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

2.(i) வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை பெற தேவையான கல்வித்தகுதி மற்றும் மாதாந்திர உதவித்தொகை விவரங்கள்:-

| கல்வித்தகுதி | மாதாந்திர உதவித்தொகை |
|---|---|
| எஸ்.எஸ்.எல்.சி.தேர்ச்சி | ரூ150/- |
| +2 /(மேல்நிலைக் கல்வி தேர்ச்சி | ரூ200/- |
| பட்டக்கல்வி மற்றும் முதுநிலைப்பட்டக்கல்வி,(பொறியியல், மருத்துவம், விவசாயம், கால்நடை மருத்துவம் போன்ற தொழிற்கல்விகள் நீங்கலாக) | ரூ300/- |

2 -

Scanned by CamScanner

( ii ) வயது வரம்பு:-

வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினத்தவரைப் பொறுத்த மட்டில் 45 வயது வரையிலும், ஏனையோரைப் பொறுத்த மட்டில் 40 வயது வரையும் என்ற உச்ச வயது வரம்பில் 3 (மூன்று) ஆண்டுகளுக்கு மட்டும் வழங்கப்படும்.

( iii) காத்திருப்புக் காலம்:-

பயனாளிகள், வேலைவாய்ப்பு அலுவலக உயிர் பதிவேடுகளில் குறைந்தபட்சம் 5 ஆண்டு காலமாவது காத்திருக்க வேண்டும்.

(3) வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை பெற கையாளப்படும் நடைமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:-

i ) வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை அதிகபட்சமாக மூன்று ஆண்டு காலத்திற்கு அல்லது ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினத்தவர்களைப் பொறுத்த வரையில் 45 வயது என்ற உச்ச வயது வரையிலும் மற்றும் ஏனையோர்களைப் பொறுத்தவரையில் 40 வயதை கடந்திருத்தல் இதனில் எது காலத்தால் முந்தியதோ அதுவரை உதவித்தொகை வழங்கப்படும். தெரியப்படும் காலாண்டின் இறுதி நாளன்று மேற்குறிப்பிடப்பட்டுள்ள வயது வரம்புகளைக் கடந்தவராக இருத்தல் கூடாது.

ii) வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை ஒவ்வொரு காலாண்டும் வங்கி வரைவோலைகளாக வழங்கப்படும். பயனாளிகள் வங்கிகளில் தொடங்கப்படுகின்ற சேமிப்புக் கணக்குகளின் மூலம் வங்கி வரைவோலைகளை காசாக்கிப் பெற்றுக்கொள்ளலாம்.

iii ) பயனாளிகள் இணைப்பு - 1ல் கண்ட சான்றிதழில் வருமானம் உள்ளிட்ட இதர அம்சங்கள் குறித்த ஒட்டு மொத்தச் சான்றிதழை வருவாய்த்துறையில் ஒருமுறை பெற்று சமர்ப்பிக்க வேண்டும். இது தவிர, ஒவ்வொரு நிதியாண்டின் துவக்கத்திலும் பணியில் இல்லை! என்பதற்கான சுய உறுதி மொழியை (Self affidavit ) அளிக்க வேண்டும்.

iv ) பயனாளிகள் வேலைவாய்ப்பு அலுவலக உயிர்ப் பதிவேடுகளில் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டு காலமாவது காத்திருந்திருக்க வேண்டும். (ஐந்து ஆண்டு காலம் பயன்பெற விண்ணப்பிக்கும் காலாண்டின் கடைசி நாளன்று கணக்கீடு செய்யப்படும்). உதவித் தொகை அடுத்த காலாண்டு முதல் வழங்கப்படும். ஆனால் 31.12.2006 வுடன் முடியும் காலாண்டிற்கான



Scanned by CamScanner

உதவித்தொகை மட்டும் இத்திட்டம் காந்தியடிகள் பிறந்த நாளான அக்டோபர்-2 ஆம் தேதி தொடங்கப்படும் என சுதந்திர தின விழா உரையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளதால், 1-10-2006 முதல் 31-12-2006 வரையுள்ள காலாண்டிற்கான உதவித்தொகை மட்டும் முன்னதாகவே அதாவது 2-10-2006 ஆம் தேதி வழங்கப்படும்.

v) வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை பெற விண்ணப்பிக்கும் காலாண்டின் கடைசி நாளில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினத்தவர்களைப் பொறுத்தவரையில் 45 வயதையும், ஏனையோர்களைப் பொறுத்த வரையில் 40 ஆண்டு வயதையும், கடந்தவராக இருத்தல் கூடாது.

vi) பயனாளி அரசுத்துறை அல்லது தனியார்துறை அல்லது எந்தவிதமான ஊதியம் பெறும் பணியிலோ அல்லது சுய வேலைவாய்ப்பிலோ ஈடுபட்டவராக இருத்தல் கூடாது. பயனாளி முற்றிலுமாக வேலை இல்லாதவராக இருத்தல் வேண்டும்.

vii) பயனாளியின் தாய், தந்தை அல்லது கணவன் அல்லது மனைவி ஆகியோரின் மாத வருமானம் ரூ 2,000/-க்கு (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) மிகாமலும் அல்லது ஆண்டு வருமானம் ரூ.24,000/- க்கு (ரூபாய் இருபத்து நான்காயிரம் மட்டும்) மிகாமலும் இருத்தல் வேண்டும்.

viii) பயனாளி தனது பள்ளி அல்லது கல்லூரிக் கல்வியினை முழுவதுமாக தமிழ்நாட்டிலேயே முடித்திருக்க வேண்டும் அல்லது பெற்றோரில் ஒருவர் அல்லது பாதுகாவலர் அல்லது கணவன் அல்லது மனைவி குறைந்தபட்சம் 15 ஆண்டு காலம் தமிழ்நாட்டிலேயே குடியிருந்தவராக இருத்தல் வேண்டும்.

ix) பயனாளி அரசு அல்லது தனியார் ஆதாரங்களின் வாயிலாக எந்தவிதமான நிதி உதவித்தொகையும் பெறுபவராக இருத்தல் கூடாது.

x) பயனாளி அன்றாடம் கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் மாணவ, மாணவியராக (Regular student) இருத்தல் கூடாது. இந்நிபந்தனை தொலைதூரக் கல்வி அல்லது அஞ்சல் வழிக் கல்வி பெறும் பயனாளிகளுக்குப் பொருந்தாது.

xi) ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு, 1993-ல் திருத்தம் செய்யப்பட்ட வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத் திட்டத்தின் கீழ் பயன்பெற்ற மனுதாரர்களும் இப்புதிய வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை திட்டத்தின் கீழ் நிர்ணயம் செய்யப்படுகின்ற வயது வரம்புகளுக்குட்பட்டு வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை பெறத் தகுதியுடையவர்கள் ஆவர்.



Scanned by CamScanner

xii) பயனாளி உதவித்தொகை பெறும் காலங்களில் வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவினைத் தொடர்ந்து புதுப்பித்து வருபவராக இருத்தல் வேண்டும்.

xiii) வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் பொறியியல், மருத்துவம், விவசாயம், கால்நடை மருத்துவம் போன்ற தொழிற் கல்வியில் பட்டம் பெற்றவர்கள் இவ்வுதவித்தொகை பெற தகுதியற்றவர்கள் ஆவர்.

<u>4. வேலை வாய்ப்பற்றோர் உதவித்தொகை திட்டத்தை நடைமுறைப்படுத்த கூடுதலாக ஒப்பளிப்பு செய்யப்படவேண்டிய பணித்தொகுப்பு குறித்த விவரங்கள்:-</u>

இத்திட்டத்தின் கீழ் உதவித் தொகை பெற எதிர்பார்க்கப்படும் பயனாளிகளுக்கு, 6,000 பயனாளிகளுக்கு, ஒரு வேலைவாய்ப்பு உதவித்தொகை பிரிவு என்ற வீதத்தில் 33 கள அலுவலகங்களில் 80 வேலைவாய்ப்பு உதவித்தொகை பிரிவுகளுக்கு ஒவ்வொரு பிரிவுக்கும் தலா ஒரு இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர், ஒரு உதவியாளர், ஒரு தட்டச்சர் என்ற வீதத்தில் 80 பிரிவுகளுக்கும் இணைப்பு: 11 -ல் கண்டுள்ளவாறு 240 பணியாளர்களும் மற்றும் 33 வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு தலா ஒரு அலுவலக உதவியாளர் வீதம் மொத்தம் 273 பணியாளர்களும், மற்றும் இத்திட்டத்தினை கண்காணிக்க வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையரகத்திற்கு 8 கூடுதல் பணியாளர்கள் இணைப்பு 11- ல் உள்ளவாறு ஒப்பளிப்பு செய்யப்படுகிறது. இவர்கள் அனுமதிக்கப்பட்ட ஊதிய விகிதத்தில் சம்பளம் மற்றும் இதர படிகள் பெற அனுமதிக்கப்படுகிறார்கள்.

<u>5. உள்கட்டமைப்பு வசதிகள்:-</u>

வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை திட்டத்தை நடைமுறைப்படுத்த இணைப்பு 111 -ல் கண்டுள்ளவாறு தேவைப்படும் உள் கட்டமைப்பு வசதிகளான நாற்காலி, மேசை, இரும்பு பீரோக்கள், அடுக்கு மற்றும் கணினிகள் கொள்முதல் செய்வதற்கு அனுமதிக்கப்படுகிறது.

6. இத்திட்டம் <u>1.10.2006</u> முதல் அமல்படுத்தப்படுகிறது.

7. ( 1 ) மேலே பத்தி 4-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பணியாளர்களுக்கான ஊதியம் கீழ்கண்ட கணக்கு தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

2230-தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு -02 .- வேலைவாய்ப்பு 001 - நெறிப்படுத்துதலும் நிர்வாகமும் 1. திட்டத்தில் சேராதவை - AA தலைமையிடப்பணியாளர்கள்- தேசிய வேலைவாய்ப்பு நிறுவனம். ( DPC No. 2230-02-001. AA -0004), மற்றும்

2230- தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு -02 வேலைவாய்ப்பு 101 - வேலைவாய்ப்புப்பணிகள் - AA மாவட்ட வேலைவாய்ப்பு பணியாளர்கள் ( DPC NO. எண் 2230-00-101-AA -0002



Scanned by CamScanner

( ii ) மேலே பத்தி 5ல் கண்ட தளவாடப் பொருட்கள், எழுதுப்-பொருட்கள் மற்றும் கணினிகள் தொடர்பான செலவினங்கள் கீழ்கண்ட கணக்குத்-தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

2235- சமூக பாதுகாப்பும் நலமும் - 60 ஏனைய சமூக பாதுகாப்பு நலத்திட்டங்கள் - 800 ஏனைய செலவு JA வேலை இல்லாத இளைஞர்-களுக்கு நிவாரணம் வழங்குதல்.

05. 02. ஏனைய சில்லறை செலவினங்கள் ரூ. 2,12,500
(DPC No. 2235-60-800-JA-0524)

05.05 அஞ்சலகள் ரூ13,16,300
(DPC No. 2235-60-800-JA-0551)

76.01 வாங்குதல் ரூ40,50,000
(DPC No. 2235-60-800-JA-7612)

( iii) மேலே பத்தி 1-ல் கண்ட பயனாளிகளுக்கு வழங்கப்படும் உதவித்-தொகை கீழ்கண்ட கணக்கு தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

(a ) 2235- சமூக பாதுகாப்பும் நலமும் -60. ஏனைய சமூகபாதுகாப்பு நலத்திட்டங்கள் - 789 - ஆதிதிராவிடருக்கான சிறப்புக்கூறுத் திட்டம்- பத்தாம் ஐந்தாண்டுத் திட்டம் பணிகள் 11 மாநிலத்-திட்டம்- JD வேலை இல்லாத இளைஞர்களுக்கு நிவாரணம் வழங்குதல்-09 உதவி மானியங்கள் 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான மானியங்கள். (DPC No. 2235-60-789-0935)

(b ) 2235-60.800- ஏனைய செலவு - JA வேலை இல்லாத இளைஞர்களுக்கு நிவாரணம் வழங்குதல் - 09. உதவி மானியங்கள் 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான மானியங்கள் (DPC No. 2235-60-800-JA-0935)

8. மேலும் பத்தி 5-ல் தளவாடப் பொருட்கள், எழுதுபொருட்கள், கணினிகள் வாங்குவதற்காக ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் "புதுப்பணியாகும்". இச்செலவினத்திற்கான சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும் சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினத்தை எதிர்-பாராச்செலவு நிதியிலிருந்து ( CONTINGENCY FUND ) மேற்கொள்ளப்-படும். இதற்கான ஆணை நிதி (வ.செ.பொ.1) துறையினால் தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து இச்செலவினத்திற்கான தொகையை வழங்குவதற்கு வரையறுக்கப்பட்ட படிவத்தில் நிதி (வ.செ.பொ.1) துறைக்கு விண்ணப்பிக்குமாறு சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை கேட்டுக்கொள்ளப்படுகிறார்.



Scanned by CamScanner

9. 2006-2007 ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவுத்திட்டம்/ இனை மதிப்பீட்டிற்கான கருத்துருவினை அனுப்பும் போது இச்செலவினங்களை சேர்த்து உரிய கருத்துருவினை அரசின் நிதி ( தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு) துறைக்கு அனுப்புமாறு சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. இத்திட்டத்திற்கு மதிப்பீட்டுக் கணக்கு, நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரி சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆவார்.

11. மேற்கண்ட திட்டத்தினை செம்மையாக நிறைவேற்றும் பொருட்டு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் செயல்படுவார் மற்றும் இத்திட்டம் குறித்த வரவு செலவு கணக்குகளையும் கண்காணிப்பார். சம்பந்தப்பட்ட மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்கள்/ உதவி இயக்குநர்கள் மாதாந்திர முன்னேற்ற அறிக்கையினை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையருக்கு அனுப்பி வைக்க வேண்டும். இவ்வறிக்கையினை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் பரிசீலனை செய்து அரசுக்கு மாதந்தோறும் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

12. இத்திட்டத்திற்கான மேற்கூறிய செலவினங்கள் யாவும் நிதி ஒதுக்கீட்டுச் சட்டம்(Appropriation Act) வெளியிட்டபின் மேற்கொள்ளப்பட வேண்டும் என ஆணையிடப்படுகிறது.

13. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 2200/ /FS /P /L&E / 06 நாள் 02-08-2006 மற்றும் அ.சா.கு.எண். 52330/CMPC/ 2006-1, நாள் 25-08-2006ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கப்பேரேடு எண். 361.

(ஆளுநரின் ஆணைப்படி)

ரமேஷ் குமார் கன்னா,
அரசு செயலாளர்

பெறுநர்
சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர்,
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, கிண்டி சென்னை 600032.
மாநிலக் கணக்காயர், சென்னை-18
மாநிலக் கணக்காயர், சென்னை-18 (பெயரில்)
மாநிலக் கணக்காயர், சென்னை-35
மாநிலக் கணக்காயர், சென்னை-35 (பெயரில்)
மாநிலக் கணக்காயர், சென்னை-9.
சம்பளக்கணக்கு அலுவலர், சென்னை-5
சம்பளக்கணக்கு அலுவலர், சென்னை-35
நிதித்துறை (L&E/BG-I/BG-II/(CMPC) சென்னை 9( 2 நகல்கள்)

பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை, சென்னை. 9.
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.

..7.

Scanned by CamScanner

## இணைப்பு - 1

**வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை திட்டத்தின் கீழ் பயன் பெற மனுதாரர்கள் சமர்ப்பிக்க வேண்டிய சான்றிதழ் (வருமானம், வேலையில் இல்லாமை தமிழ்நாட்டிலேயே கல்வி கற்றிருத்தல் அல்லது பெற்றோர் அல்லது பாதுகாவலர் கணவன் அல்லது மனைவி தமிழ்நாட்டில் குடியிருத்தல் ஆகியவற்றை உள்ளடக்கியது)**

வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை திட்டத்தின் கீழ்க்கண்டவாறான சான்றிதழ் வருவாய்த்துறையிடமிருந்து பெற்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1. திரு/திருமதி/செல்வி ........................ என்ற வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை திட்டத்தின் கீழ் பயன்பெற உள்ள மனுதாரரின் தாய்/தந்தை/கணவன்/மனைவி ஆகிய திரு/திருமதி............ முகவரியில் வசித்து வருபவரின் மாத வருமானம் ரூ.2,000/-க்கு மிகாமலும் ஆண்டு வருமானம் ரூ.24,000/- க்கு மிகாமலும் உள்ளது என சான்று அளிக்கப்படுகிறது.

2. திரு/திருமதி/செல்வி ................ என்ற வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை திட்டத்தின் கீழ் பயன்பெற உள்ள மனுதாரர் அரசு அல்லது தனியார் துறையில் எர் விதமான ஊதியம் பெறும் பணியில் இல்லை என்றும், இவர் சுய வேலைவாய்ப்பில் ஈடுபடவில்லை என்றும் இவர் முழுவதுமாக வேலையில்லாமலேயே இருந்து வருகிறார் என்று சான்று அளிக்கப்படுகிறது.

3. திரு/திருமதி/செல்வி ...............என்ற வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை திட்டத்தின் கீழ் பயன்பெற உள்ள மனுதாரர் அரசு அல்லது தனியார் துறை அல்லது பிற ஆதாரங்களின் வழி எந்தவிதமான உதவித்தொகையும் பெற்று வருபவர் அல்லர் என்றும் சான்று அளிக்கப்படுகிறது.

4. திரு/திருமதி/செல்வி .................என்ற வேலைவாய்ப்பற்ற மனுதாரர் தமிழ்நாட்டிலேயே தனது பள்ளி அல்லது கல்லூரிக் கல்வியினை முடித்தவர் அல்லது இம்மனுதாரரின் பெற்றோரில் தாய்/தந்தை அல்லது பாதுகாவலர் அல்லது கணவன் அல்லது மனைவி தமிழ்நாட்டிலேயே 15 ஆண்டுகளுக்கும் மேலாக குடியிருந்து வருபவர் என்று சான்று அளிக்கப்படுகிறது.

5. திரு/திருமதி/செல்வி .................என்ற வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை திட்டத்தின் கீழ் பயன்பெற உள்ள மனுதாரர் அன்றாடம் பள்ளி அல்லது கல்லூரிக்கு சென்று வரும் மாணவர் அல்லது மாணவியர் அல்ல என்று சான்று அளிக்கப்படுகிறது.

ரமேஷ்குமார் கன்னா
அரசு செயலாளர்.

/உண்மை நகல்/

இளநிலை வேலைவாய்...

Scanned by CamScanner

## இணைப்பு – 1

வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் ஒப்பளிப்பு செய்யப்பட்ட கூடுதல் பணியாளர்களின் விவரம்.

| வ.எண். | பதவி | ஊதிய விகிதம் ரூ. | வேலைவாய்ப்பு அலுவலகங்களின் பிரிவு ஒன்றுக்கு | வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையரகம். |
|---|---|---|---|---|
| 1. | உதவி இயக்குநர் | 9100–275–14050 | — | 1 |
| 2. | இளநிலை வேலை-வாய்ப்பு அலுவலர் | 5500–175–9000 | 1 | 2 |
| 3. | உதவியாளர் | 4000–100–6000 | 1 | 2 |
| 4. | சுருக்கெழுத்து தட்டச்சர் | 4000–100–6000 | – | 1 |
| 5. | தட்டச்சர் | 3200–85–4900 | 1 | 1 |
| 6. | அலுவலக உதவியாளர் | 2550–3200 | – | 1 |
| | | மொத்தம் | 3 | 8 |

பிரிவு ஒன்றுக்கு 3 பணியாளர்கள் வீதம் 80 பிரிவுகளுக்கு 240
(80 இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர்
80 உதவியாளர்
80 தட்டச்சர்)

தலா ஒரு அலுவலக உதவியாளர் வீதம் 33 வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு 33

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையரகத்திற்கு .. .. 8

--------

மொத்தப் பணியாளர்கள் 281

--------

ரமேஷ் குமார் கன்னா
அரசு செயலாளர்.

/உண்மை நகல்/

[signature] 07/03/06

இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர்.

Scanned by CamScanner

## இணைப்பு—II

**வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் தளவாடப் பொருட்கள் மற்றும் கணினிகள் வாங்குவதற்கு ஒப்பளிப்பு செய்யப்பட்ட விபரம்**

| வரிசை எண். | பொருள்கள் | தொடரா செலவினம் ரூ. | தொடர் செலவினம் ரூ. |
|---|---|---|---|
| 1 | நாற்காலி 247 x ரூ.500 | 1,23,500 | — |
| 2 | மேசை 247 x ரூ.1500 | 3,70,500 | — |
| 3 | ஸ்டீல் பீரோ 162 x ரூ.4000 | 6,48,000 | — |
| 4 | ஸ்டூல் 82 x ரூ.150 | 12,300 | — |
| 5 | கணினி (ம) உதிரி பாகங்கள் 81 x ரூ.50,000 (முதல் 2 அல்லது 3 ஆண்டுகள் வாரண்டி காலம்) | 40,50,000 | — |
| 6 | கணினி, மேசை மற்றும் நாற்காலி 81 x ரூ.2000 | 1,62,000 | — |
| 7 | எழுதுபொருள் மற்றும் இதர செலவினங்கள் 81 x ரூ.5000 | | 4,05,000 |
| | மொத்தம் | 53,66,300 | 4,05,000 (1.10.2006 முதல் 31.3.2006 வரை 6 மாதங்களுக்கு ரூ.2,02,500/— |

ரமேஷ் குமார் கன்னா,
அரசு செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.

Scanned by CamScanner